<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் நாள் (7.12.2021) செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான துாய்மை பணியாளர்கள் குடியிருப்புகளில் மழை நீர் வடிகால் செல்கிறது. இதனால் பொதுமக்களுக்கும், இப்பகுதியில் குடியிருக்கும் துாய்மை பணியாளர்களுக்கும் இடையூறாக உள்ளது. மேலும் தரைப்பகுதி மண் தரையாக உள்ளதால் குடியிருப்பு வாசிகள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, துாய்மை பணியாளர்கள் குடியிருப்பு பகுதியில் நடைபாதை அமைத்திட பொது நிதியின் மூலம் 9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1174, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சியில் நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணியில் வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள், தடுப்புகள், சாமியான பந்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 9.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1175, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடைக்கு செல்லும் சாலை மண் சாலையாக உள்ளது. எனவே, இச்சாலையில் அணுகு சாலை, பாதுகாப்பு சுவர் மற்றும் கண்காணிப்பு கேமரா பொறுத்திட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1176, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சியில் பொறியியல் பிரிவில் பொறியாளர் அறை, இளநிலை பொறியாளர் அறை மற்றும் பணி ஆய்வரின் அறையில் கோப்புகள் மற்றும் அளவு புத்தகஙகளை பாதுகாப்பதற்கு போதுமான அலமாரிகள் இல்லாமல் கோப்புகள் மேஜையிலேயே வைக்கப்பட்டு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே, பொறியியல் பிரிவிற்கு மூன்று எண்ணம் மர பீரோ உள்ளூரில் வாஙகிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 45,000/– அகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1177, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சியில் நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணி தொடர்பாக அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் தேவையான வசதிகள், குடிநீர் , மின் விளக்கு , இருக்கை அமைப்பு , சாமியானா பந்தல் மற்றும் இதர வசதிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1178, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான இந்திரா நகரில் அமைந்துள்ள காமராசர் தஙகும் விடுதியில் தற்போது நகராட்சி பணியாளர்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இந்த குடியிருப்புகளின் மேற்கூரை மிகவும் சேதமடைந்து குடியிருப்பதற்கு ஏற்றதாக இல்லாத நிலை உள்ளது. எனவே, இந்திரா நகரில் உள்ள காமராசர் தஙகும் விடுதி குடிருப்புகளின் மேற்கூரை மற்றும் மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு பொது நிதியின் மூலம் 9.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1179, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கல்வி நிதி 2021–2022 ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 30.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியின் வகுப்பறைகளை தரம் உயர்த்தும் பணி (Smart Class) | 9.00 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.18% குறைவு<br><br>1.48% அதிகம் |
| 2 | சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப் பள்ளியின் வகுப்பறைகளை தரம் உயர்த்தும் பணி (Smart Class) | 9.00 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.18% குறைவு<br><br>1.48% அதிகம் |
| 3 | அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 5.60 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.02% குறைவு<br><br>0.05% அதிகம் |
| 4 | சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப் பள்ளியில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 5.60 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.02% குறைவு<br><br>0.05% அதிகம் |

அலுவலக குறிப்பு: வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1180, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பொது மக்களிடம் குப்பைகளை பிரித்து வழங்க தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர் 1300 எண்ணம் அச்சடித்திட 3.12.2021 அன்று கோரப்பட்டுள்ளதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பொருட்களின் விபரம் | பழனி வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் லிட்., சிவகிரிப்பட்டி, பழனி. | ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் ஒட்டன்சத்திரம். |
|---|---|---|---|
| 1 | அ4 மல்டிகலர் ஸ்டிக்கர் | 8.10 + GST 18% | 9.00 + GST 18% |
| 2 | அ4 நோட்டீஸ் | 4.00 + GST 10% | 4.20 + GST 10% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பழனி வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் லிட்., சிவகிரிப்பட்டி, பழனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.1290/2021/எச்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1181, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஏரியை சுற்றியுள்ள பழைய மின் கம்பங்களை அகற்றுதல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள குடிநீர் மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்து பொருத்திய வகையில் பட்டியல் தொகை ரூ.45000/– க்கு மின் பணியாளர் திரு என்.ரசல் ராஜேந்திரன் அவர்களால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் முன் பணமாக தொகை ரூ. 45,000/– அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, முன் பணத்தினை ஈடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1182, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN57 AY 5392 பொலிரோ வாகனம் இதுவரை 2,50,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. இவ்வாகனத்தின் பராமரிப்பு பணி 60,000 கி.மீட்டருக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியது. வாகன பற்றாக்குறை மற்றும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற பணிகளினால் உரிய காலங்களில் வாகனத்தின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அதிக மழையின் காரணமாக வாகனத்தின் பாடி துருப்பிடித்துள்ளது. தற்போது நகர்ப்புற உள்ளாசி தேர்தல் பணி துவஙகியுள்ளநிலையில் வாகனத்தின் தேவை அத்தியாவசியமாக உள்ளது. எனவே, வாகனத்தின் சர்வீஸ் பணி மற்றும் பாடி டிஙகரிங மற்றும் பெயிண்டிங பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள விலைப்பட்டியல் கோரப்பட்டதில் உத்தேச மதிப்பு ரூ.156693/– க்கு (Mechanical and Body work) பெறப்பட்டுள்ளது (Quotaton No. QTN22B001121 & QTN22A000375 dated 29.11.2021 & 6.12.2021). எனவே, இவ்வாகனத்தின் பழுதுகளை மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.
2.வாகனத்தின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1183, நாள். 7.12.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022 ன்கீழ் வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் மண் சாலையினை சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079017R117), வார்டு எண். 17–வி.ஜி.பி. பார்க் சாலை (Unicode No :079017R124) வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் 1வது குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079017R119) வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் இரண்டாம் குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079017R118) வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் மூன்றாவது குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079017R120) வார்டு எண். 3 –எஸ்.வி. உறாட்டல் மண் சாலையினை சிமிண்ட் சாலையாக மாற்றுதல் (Unicode No :079003R20) வார்டு எண். 4– ஆண்டவர்பாதம் மண் சாலையினை தார்ச்சாலையாக அமைத்தல் (Unicode No 079004R33) வார்டு எண்.4–கான்வென்ட் மண் சாலையினை சிமிண்ட் சாலையாக மாற்றுதல் (Unicode No :079004R22) பணிக்கு 01.12.2021 அன்று கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பந்த உறைகள் மட்டும் திறக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி |
|---|---|
| 1 | திரு பி. அரசகுமார்,ஒப்பந்ததாரர்,கொடைக்கானல். |
| 2 | திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம்,ஒப்பந்ததாரர், கொடைக்கானல். |

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளும் இந்நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவாய் தொழில்நுட்ப தகுதி வாய்ந்தவைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் **02.12.2021** தேதியன்று விலைவிகிதஙகளுக்கான ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி | ஒப்பந்தத் தொகை (GST 12%)சேர்த்து | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு பி. அரசகுமார்,<br>ஒப்பந்ததாரர்,<br>கொடைக்கானல். | 5,34,17,707/- | 4.95% அதிகம் |
| 2 | திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம்,<br>ஒப்பந்ததாரர்,<br>கொடைக்கானல். | 5,42,07,464/- | 6.50 % அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள பி. அரசகுமார், அவர்கள் மதிப்பீட்டை விட 4.95% கூடுதலாக வழஙகியுள்ளார்.

எனவே, மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி. அரசகுமார், அவர்களிடம் விலை குறைப்பு கோரி **02.12.2021** அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் திரு. பி. அரசகுமார், ஒப்பந்ததாரர் அவர்கள் **03.12.2021** தேதியிட்ட கடிதத்தில் தற்போதைய கட்டுமான பொருட்கள் விலை மற்றும் இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்கள் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் மேலும் விலைக்குறைப்பு செய்து தர இயலாது என கடிதம் வழஙகியுள்ளார். மேற்படி திரு.பி. அரசகுமார், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.**5,34,17,707**/- என்கின்ற **4.95%** மதிப்பீட்டைவிட கூடுதலாக பெற்ற தொகையுடன் இப்பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொழிலாளர் நலநிதி **1%** ரூ.**5,19,300**/- மற்றும் இதர எதிர்பாராத இனத்தினை மேற்கொள்ள தற்போதய மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.**5,13,030**/- ஆகியவற்றையும் சேர்த்து மொத்தம் ரூ. **5,44,50,037**/-ற்கு பணி மேற்கொள்ள ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. இப்பணியானது அரசின் திட்டப்பணியாக உள்ளதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.**2.7.2**.ன்படி நகராட்சி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதால், குறைந்த ஒப்பந்த விகிதமாக **4.95%** மதிப்பீட்டைவிட கூடுதலாக பெறப்பட்ட பி. அரசகுமார், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டு தொகை ரூ.**519.30** இலட்சத்திற்கு கூடுதலாக ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1.)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | **1184, நாள். 7.12.2021.** |
|---|---|
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.